# 2

# அல்லாஹ் வணக்கத்துக்குரியவன்

அல்லாஹ் இவ்வுலகை 'குன்' (ஆகுக) என்ற சொல்லின் மூலம் படைத்தான். பின்னர் மனிதர்களையும் ஜின்களையும் அவனை வணங்கு வதற்காகப் படைத்தான்.

மனிதனின் இயல்பை அறிந்திருந்த மலக்குகள் ''அநியாயம் செய்து இரத்தத்தை ஓட்டக்கூடியவர்களையா படைக்கப் போகிறாய். நாமோ உன்னைப் புகழ்ந்து தூய்மைப்படுத்துபவர்களாக இருக்கின்றோம்'' என்ற அல்லாஹ்வுடனான நீண்ட உரையாடல் ஸூரதுல் பகரா 30 வது வசனத்தில் தொடர்கிறது.

மனிதனைப் படைத்த அல்லாஹ், தன்னை மாத்திரமே வணங்க வேண்டும் என மனிதனுக்குக் கட்டளையிட்டான்.

மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறையச்சம் (தக்வா) உடையோராகுவீர்கள். (அல்குர்ஆன் 2:21)

எனினும் மனிதன் இதனை மறந்து வரையறைக்குட்பட்ட தனது அறிவுக்கு ஏற்றாற் போல் அல்லாஹ் படைத்த சிருஷ்டிகளில் காணப்படும் விசேட தன்மைகளைப் பார்த்து கடவுளர்கள் என்று அவற்றை நம்பி வணங்க முற்பட்டான்.



இவ்வாறு அல்லாஹ்வை விடுத்து இன்னொரு கடவுளைக் கற்பனை செய்து வணங்குவது ஷிர்க் ஆகும். அல்லாஹ் இப் பாவத்தை ஒரு போதும் மன்னிக்க மாட்டான். இவ்வாறு ஷிர்க் வைப்பது தொன்றுதொட்டு இடம்பெற்று வருகிறது. இது முற்றிலும் தவறானதாகும்.

''அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை, அவனே பேரரசன், மிகப்பரிசுத்தமானவன், சாந்தியளிப்பவன், தஞ்சமளிப்பவன், பாதுகாப்பவன், (யாவரையும்) மிகைப்பவன், அடக்கியாள்பவன், பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மை யானவன். (அல்குர்ஆன் 59:23)

'(வானம், பூமி ஆகிய) இவற்றில் அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், நிச்சயமாக இவையிரண்டும் அழிந்தே போயிருக்கும்' (அல்குர்ஆன் 21:22) என்று அல்குர்ஆன் அறிவுறுத்து கின்றது.

வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமேயாவான். அவன் தனித்தவன். யாருடைய தேவையும் அற்றவன். அவனுக்கு நிகராக யாரையும் கொண்டுவரவும் முடியாது. அவனே அண்ட சராசரங்களையும், அதிலுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் படைத்தவன். அவனை அறியாமல் மரத்தின் இலைகூட உதிராது. மறைவானதையும் பகிரங்க மானதையும் அறிபவன் அவனே; அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். அவன் அனைத்தையும் மிகைத்தவனாக, ஞானம் மிக்கவனாக இருக்கின்றான். எனவே அவனையே நாம் வணங்க வேண்டும்.

நபியே நீர் கூறுவீராக! ''அல்லாஹ் அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனை யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை.'' (அல்குர்ஆன் 112: 1-4)

அல்லாஹ்வை வணங்குதல் என்பது சில கிரியைகளில் ஈடுபடுவது மாத்திரமல்ல. முழு வாழ்க்கையிலும் அவன் கூறிய பிரகாரம் ஏவல்களைப் பின்பற்றி விலக்கல்களைத் தவிர்த்து வாழ்வதாகும். அல்லாஹ் மனிதர்களை நேர்வழிப்படுத்த மனிதர்களிலிருந்து தேர்ந்தெடுத்தவரே நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார் என்பதை நாம் அறிவோம். எனவே இறைத் தூதராகிய அவர் காட்டிய வழியின் பிரகாரம்

எமது முழு வாழ்வையும் நாம் அமைத்துக் கொள்ளல் வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டவற்றை ஏற்று நடப்பதோடு தடுத்தவற்றை முற்று முழுதாக தவிர்ந்துகொள்வது எமது கடமையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் போன்றே முன்னைய நபிமார்களும் அல்லாஹ்வை மாத்திரமே வணங்கும்படி மக்களுக்குப் போதித்தார்கள். அல்லாஹ்வையே வணங்க வேண்டும் என மக்களை அழைத்த ஆதம் அலைஹிஸ்ஸலாம், நூஹ் அலைஹிஸ்ஸலாம், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ்ஸலாம் போன்ற நபிமார்களின் வரலாற்றை அல்லாஹ் அல்குர்ஆனில் தெளிவாக எடுத்தியம்பியுள்ளான்.

''உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத் தவிர வேறு நாயனில்லை. எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று வஹி அறிவித்தோம்'' (21:25)

வணக்கத்திற்கு உரியவன் என்பதன் பொருள், உதவி தேடத் தகுதி யானவனும் அவனே என்பதாகும். அவன் மனிதர்களை விட்டு வெகு தூரத்தில் இல்லை. தரகர்கள் கொண்டுதான் அவனை அடையவேண்டும் என்ற அவசியமுமில்லை. அவன் மனிதர்களுக்கு மிக சமீபமாக இருக்கின்றான். மனிதனின் தேவைகளை நிறைவு செய்து தருபவனும் அவனேயாவான். எனவே அவனிடமே உதவி தேட வேண்டும்.

''உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்'' என்று தினமும் தொழுகையில் மொழிந்து விட்டு இருந்துவிடக் கூடாது. எமது அனைத்து தேவைகளையும் அல்லாஹ்விடமே முன்வைக்க வேண்டும். அவன் அடியார்களுடன் தாயை விட இரக்கமுள்ளவன். முக்காலத்தையும் அறிந்த அவன் அடியார்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பான். அவ்வாறு நிறைவேற்றாது போனாலும் அவனிடம் அவன் உதவி தேடியதற்கான நன்மைகளை வாரி வழங்குகின்றான்.

## அல்லாஹ்வின் அடியானாக வாழ்வதற்கான சில வழிமுறைகளை அவதானியுங்கள்

1. மனிதர்கள் தனக்குப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை முன்மாதிரிகளை வாழ்வில் பின்பற்றுங்கள்.
3. பெருமை உங்களை அழிக்கும். எனவே அதனை முற்றாக விட்டு நீங்கிக் கொள்ளுங்கள்.
4. அனைத்தையும் அல்லாஹ்விடமே முன்வையுங்கள்; உதவி தேடுங்கள்.

## பயிற்சி

1. அல்லாஹ்வின் பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
2. நாம் அல்லாஹ்விடம் உதவி தேட வேண்டும் என்பதற்கான காரணம் யாது?
3. அல்லாஹ் முக்காலங்களையும் அறிந்தவன் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
4. அல்லாஹ்வின் அடிமையாக இருக்க வேண்டுமானால் பெருமை, கர்வம் கொள்ளல் கூடாது. இதனை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக.
5. வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மட்டுமே என்பதற்கான அல்குர்ஆன் ஆதாரங்கள் இரண்டை எடுத்துக்காட்டுக.